# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்:

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. சிலப்பதிகாரக் கதை தொடங்கியது

அ ) சேரநாட்டில் ☐ ஆ ) சோழநாட்டில் ☐
இ ) பாண்டியநாட்டில் ☐ ஈ ) நாஞ்சில் நாட்டில் ☐

2. தமிழ்நெடுங்கணக்கில் உள்ள மொத்த எழுத்துகள்

அ ) 12 ☐ ஆ ) 216 ☐
இ ) 247 ☐ ஈ ) 18 ☐

3. தோமசு வான்றி____________நாட்டு ஆளுநர்.

அ ) போர்த்துக்கேய ☐ ஆ ) ஒல்லாந்து ☐
இ ) ஆங்கிலேய ☐ ஈ ) இந்திய ☐

4. கைத்தாளம் என்பது

அ ) தோற்கருவி ☐ ஆ ) துளைக்கருவி ☐
இ ) நரம்புக்கருவி ☐ ஈ ) கஞ்சக்கருவி ☐

5. நான் நீர்வேட்கையால் இளநீரை ____________என்று குடித்தேன்.

அ ) மடமட ☐ ஆ ) மளமள ☐
இ ) படபட ☐ ஈ ) பளபள ☐

6. முப்பத்தைந்து பிராமி கல்வெட்டுகள் கண்டு பிடிக்கப்பட்ட இடம்

அ ) பெரியபுளியங்குளம் ☐ ஆ ) பாவற்குளம் ☐
இ ) கந்தளாய்க்குளம் ☐ ஈ ) இரணைமடுக்குளம் ☐

7. அறிவுக்குப் பகை

அ ) சினம் ☐ ஆ ) அழகு ☐
இ ) அன்பு ☐ ஈ ) நட்பு ☐

8. நீ + உடன் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ ) உங்களுடன் ☐ ஆ ) நீங்களுடன் ☐

இ ) உன்னுடன் ☐ ஈ ) என்னுடன் ☐

9. தமிழகத்தில் கல்லணை கட்டுவதற்காகப் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைப்பிடித்துச் சென்ற மன்னன்

அ ) இராசராசசோழன் ☐ ஆ ) இராசேந்திரசோழன் ☐

இ ) கரிகாற்சோழன் ☐ ஈ ) குலோத்துங்க சோழன் ☐

10. சேரமான் கவரி வீசியது

அ ) அதியர்மானுக்கு ☐ ஆ ) குமணனுக்கு ☐

இ ) மோசிகீரனாருக்கு ☐ ஈ ) எல்லாளனுக்கு ☐

11. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்து

அ ) ஏ ☐ ஆ ) ஒ ☐

இ ) எ ☐ ஈ ) இ ☐

12. கட்டப்பொம்மன்_____________ படை உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டான்.

அ ) சங்கிலியனின் ☐ ஆ ) கயிலைவன்னியனின் ☐

இ ) எல்லாளனின் ☐ ஈ ) பண்டாரவன்னியனின் ☐

13. உழவர்கள் வயலை உழும்போது சேற்றில் மிதந்தவை

அ ) பூக்கள் ☐ ஆ ) சங்குகள் ☐

இ ) இளநீர்கள் ☐ ஈ ) கனிகள் ☐

14. பாடினான் என்பது

அ ) உடன்பாட்டு வினை ☐ ஆ ) எதிர்மறை வினை ☐

இ ) பெயரெச்சம் ☐ ஈ ) வினையெச்சம் ☐

15. 17 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் அநுராதபுரம் தமிழருக்குச் சொந்தமாக இருந்தது எனத் தனது நூலில் குறிப்பிட்டவர்

அ ) யே.பி.லூயிசு ☐ ஆ ) வேர்சில் ☐

இ ) றொபேட் நொக்சு ☐ ஈ ) தொலமி ☐

16. யாழ்நூலை எழுதியவர்

அ ) சேக்கிழார் ☐ ஆ ) ஔவையார் ☐

இ ) விபுலாநந்த அடிகள் ☐ ஈ ) சிவப்பிரகாச அடிகள் ☐

17. '**மலர் போன்ற கை**' என்ற உவமை அணியில் மலர் என்பது

அ ) பொதுத்தன்மை ☐ ஆ ) உவமானம் ☐

இ ) உவமேயம் ☐ ஈ ) உருபு ☐

18. நீர்ச் செடிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) ஆம்பல் ☐ ஆ ) மல்லிகை ☐

இ ) காந்தள் ☐ ஈ ) முல்லை ☐

19. கத்தரித் தோட்டத்துக் காவலன் கையில் வைத்திருந்தவை

அ ) கத்திகோடரி ☐ ஆ ) வாள்கேடயம் ☐

இ ) அம்புவில் ☐ ஈ ) மண்வெட்டிகோடரி ☐

20. கார்த்திகை என்பது

அ ) தொழிற்பெயர் ☐ ஆ ) சினைப்பெயர் ☐

இ ) காலப்பெயர் ☐ ஈ ) இடப்பெயர் ☐

21. அரசன் என்பதற்கு அரசி போல புலவனுக்கு

அ ) புலத்தி ☐ ஆ ) உழத்தி ☐

இ ) இடைச்சி ☐ ஈ ) இறைவி ☐

22. பெச்கி அடிகளாருக்கு மதுரைத் தமிழ்க்கழகம் வழங்கிய பட்டம்

அ ) தேவநேயப்பாவாணர் ☐ ஆ ) பாவேந்தர் ☐

இ ) கவிமணி ☐ ஈ ) வீரமாமுனிவர் ☐

23. வேற்றுமைகள்

அ ) ஐந்து ☐ ஆ ) எட்டு ☐

இ ) நான்கு ☐ ஈ ) ஏழு ☐

24. அறிவொளி பம்பரம் விளையாடுகிறான். இதில் விளையாடுகிறான் என்பது

அ ) எதிர்காலம் ☐ ஆ ) இறந்தகாலம் ☐

இ ) முக்காலம் ☐ ஈ ) நிகழ்காலம் ☐

25. பாவேந்தர் விருந்தோம்பலின் சிறப்பைப் பற்றி எழுதிய நூல்

அ ) அழகின் சிரிப்பு ☐ ஆ ) இருண்டவீடு ☐

இ ) குடும்ப விளக்கு ☐ ஈ ) இசை அமுது ☐

26. எழில் என்பதன் ஒத்த சொல்

அ ) துயில் ☐ ஆ ) ஈட்டல் ☐

இ ) அழகு ☐ ஈ ) தெளிவு ☐

27. **அடாது செய்தவர் படாது படுவர்.** இப்பழமொழியின் கருத்து

அ ) போலிப் பெருமை காட்டுதல் ☐

ஆ ) தீயன செய்தோர் துன்புறுவர் ☐

இ ) மனநிறைவற்ற நிலை ☐

ஈ ) விரும்பினால் இல்லாதவனும் ஈயலாம் ☐

28. **"காராளர் அணிவயலில் உழுது"** என்ற பாடலைப் பாடியவர்

அ ) சேக்கிழார் ☐ ஆ ) இரட்டையர் ☐

இ ) கபிலர் ☐ ஈ ) பாரதியார் ☐

29. நீ வீட்டுக்குச் செல்! இச்சொல்லியம்

அ ) ஏவல் ☐ ஆ ) கூற்று ☐

இ ) வினா ☐ ஈ ) மெய்ப்பாடு ☐

30. மா + சோலை என்பதைப் புணர்த்தி எழுதினால்

அ ) மாசோலை ☐ ஆ ) மாஞ்சோலை ☐

இ ) மாம்சோலை ☐ ஈ ) மாங்சோலை ☐

| புள்ளிகள் 30 |
|---|

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மக்களின் அறிவை வளர்க்கப் பயன்படுவனவற்றுள் செய்தித்தாளும் ஒன்றாகும். செய்தித்தாள் முதன்முதலில் இத்தாலி நாட்டில் வெளியிடப்பட்டது. செய்தித்தாளில் அரசியல், மருத்துவம், வணிகம், விளம்பரம், விளையாட்டு போன்ற பல செய்திகள் இடம்பெறுகின்றன. மக்களின் கல்வி அறிவையும் உலக அறிவையும் வளர்க்கச் செய்தித்தாள்கள் பெரிதும் உதவுகின்றன. இந்தியாவில் 1831 ஆம் ஆண்டு வெளிவந்த 'தமிழ் இதழ்' என்ற செய்தித்தாளே தமிழ்மொழியில் முதன்முதலில் வெளியிடப்பட்ட செய்தித்தாளாகும்.நாம் செய்தித்தாள்களை வாசிப்பதனூடாகச் செய்திகளை அறிந்து கொள்வதுடன் வாசிப்புத் திறனையும் வளர்த்துக் கொள்ளலாம். பெரியவர்களுக்கு மட்டுமன்றி சிறுவர்களுக்கான குட்டிக்கதைகள், திருக்குறள், பழமொழிகள் போன்றனவும் இதில் இடம்பெறுகின்றன. செய்தித்தாள் வாசிப்பது அனைவருக்கும் பயனுள்ள ஒரு பொழுதுபோக்காகும்.

1. செய்தித்தாள் முதன்முதலில் எந்த நாட்டில் வெளியிடப்பட்டது?

______________________________

2. செய்தித்தாள்கள் எவற்றிற்குப் பெரிதும் உதவுகின்றன?

______________________________

______________________________

3. செய்தித்தாளில் சிறுவர்களுக்காக இடம்பெறும் செய்திகள் இரண்டைத் தருக.

______________________________

______________________________

4. தமிழ்மொழியில் முதன்முதலில் வெளியான செய்தித்தாளின் பெயர் என்ன?

______________________________

______________________________

5. வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ள எது உதவுகிறது?

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. அ. தோற்கருவி ஒன்றின் பெயரைத் தருக.

   ஆ. யாழ் எவ்வகைக் கருவி?

2. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகர் எது?

3. *குறள்:-* பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
   நன்மை கடலிற் பெரிது

   இக்குறளின் பொருளை எழுதுக.

4. திருக்குறளில் சினங்காத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ள அதிகாரம் எது?

5. போர்த்துக்கேயர் யாருக்கு அஞ்சி வெற்றிலைக்கேணியில் கோட்டையைக் கட்டினர்? அக்கோட்டையின் பெயரைத் தருக.

6. சிலப்பதிகாரத்திற்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்களுள் ஒன்றைத் தருக.

7. வன்னியின் அரசகுல மகளிர் யாவர்?

புள்ளிகள் 10

**4)** **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## உழவர்

| | | | | |
|---|---|---|---|---|
| செய்பவர் | உயிர்கள் | உயர்ந்த | உழவரின் | பிறரின் |

உண்ணும் உணவைத் தந்திடும் உழவே
உலகில் ____________ தொழிலன்றோ !
மண்ணில் பொன்னைக் காணச் செய்திடும்
மாண்பு மிக்க தொழிலன்றோ !

உழவுத் தொழிலைச் ____________ எல்லாம்
உலகில் உயர்வு அடைகின்றார்
இழிவுடன் மற்றவர் ____________ பின்னே
ஏவல்கள் பல புரிகின்றார்

உழவு நின்றால் ____________ வீழ்ந்து
உலகம் அன்றோ அழிந்துவிடும் !
____________ பெருமை உணர்ந்தால் போதும்
உலகம் என்றும் செழித்திருக்கும்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தரப்பட்டுள்ள சொற்களின் திணை, இடம் என்பவற்றைத் தருக.

| சொற்கள் | திணை | இடம் |
|---|---|---|
| சிறுமி | | |
| பெட்டி | | |
| கூறுங்கள் | | |

2. கீழ்வரும் சொற்களின் எதிர்ச்சொற்களைத் தருக.

தொடக்கம் ________________ காலை ________________

அகம் ________________ குறைவு ________________

மேடு ________________ இழு ________________

3. பின்வரும் தொடர்ச் சொல்லியத்தை, தனிச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

கவியரசி பூக்களைக் கொய்து பூமாலை கட்டினாள்.

________________________________________

________________________________________

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக

குணப்பெயர் ________________________

பெயரெச்சம் ________________________

அடுக்குத்தொடர் ________________________

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

உடற்பயிற்சி ________________________________

நன்மை ________________________________

புள்ளிகள் 15

## 6) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

We have to learn good habbits. Getting up early in the morning is one of the good habbits. Students should get up early in the morning, brush teeth, wash face and have their breakfast in their holidays too. Studying early in the morning is also very good. So, if students get up early in the morning and study, it will improve their education.

Noi dobbiamo avere delle buone abitudini. Tra queste buone abitudini vi è quella di alzarsi presto al mattino. Gli studenti dovrebbero, anche durante le vacanze, alzarsi presto, lavarsi i denti, lavarsi il viso e fare colazione. Inoltre è buona abitudine studiare al mattino. Studiando tutti i giorni al mattino gli studenti hanno la possibilità di migliorare i propri voti e le proprie prestazioni.

Wir müssen gutes Verhalten lernen. Das Aufstehen am Morgen ist eine der guten Verhaltensweisen. Schüler müssen auch an schulfreien Tagen frühmorgens aufstehen, die Zähne putzen, das Gesicht waschen und frühstücken. Außerdem ist das Lernen am frühen Morgen sehr gut. Wenn also Schüler jeden Tag früh morgens aufstehen und lernen, können sie in der Bildung Fortschritte machen.

Vi måste lära oss goda vanor. Att vakna på morgonen är en av dessa goda vanor. Under skollovsdagarna måste elever vakna tidigt på morgonen och borsta tänderna, tvätta ansiktet och äta frukost. Dessutom är det bra att plugga tidigt på morgonen. Därmed kan elever nå framgång i studierna ifall de vaknar tidigt på morgnarna och pluggar.

Wij moeten goede gedragingen leren. Vroeg opstaan is een goede eigenschap. Studenten/leerlingen moeten tijdens de vakantie vroeg opstaan, tandenpoetsen, gezicht wassen en ontbijten. Ook is 's ochtends leren goed. Het is goed als studenten vroeg opstaan en leren. Dit is goed voor hun voortgang.

Vi skal lære gode væremåder. At stå op om morgenen er en god væremåde. På skolefridage skal eleverne stå tidligt op, børste tænder, vaske sig og spise morgenmad. Desuden er det meget godt at læse om morgenen. Hvis eleverne står tidligt op hver morgen og læser, styrker det også deres evner i skolen.

Vi må lære gode vaner. Å stå opp tidlig om morgenen er en av de gode vanene. Elever bør stå tidlig opp om morgenen, pusse tennene, vaske ansiktet og spise frokost i feriene sine også. Å lese lekser tidlig om morgenen, er også veldig bra. Så, hvis elever står opp tidlig om morgenen for å gjøre lekser, vil det forbedre deres utdannelse (karakterer).

Nous devons apprendre les bonnes habitudes. Se lever tôt le matin est une des bonnes habitudes à avoir. Les étudiants, en période de vacances, devraient se lever tôt, se brosser les dents, se laver le visage et prendre le petit déjeuner. Étudier tôt le matin est également bon. Donc, si les étudiants se lèvent tôt le matin et étudient, cela va leurs permettre de s'améliorer à l'école.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**புள்ளிகள் 05**

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ விருந்தோம்பல்

- ✸ இலைதளிர்காலம்
  - ➢ காலங்கள்
  - ➢ காலநிலையில் ஏற்படும் மாற்றம்
  - ➢ மலர்கள் மலர்தல்
  - ➢ பறவைகள் விலங்குகளின் இடமாற்றம்
  - ➢ இக்காலத்தில் நீர் செய்ய விரும்புவன

- ✸ நீர் சென்ற சுற்றுலா

புள்ளிகள் 20